# பாதுகாப்புத் தொழில்நுட்பங்களுடன் ஏடிஎம் இயந்திரம் அறிமுகம்

**பெங்களூரு, ஜன. 21:** பாதுகாப்புத் தொழில் நுட்பங்கள் பொருத்தப்பட்ட இயந்திரங் களைப் பயன்படுத்துவதன் மூலம் ஏடிஎம் மையங்களில் கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்க முடியும் என்று, செக்கூரன்ஸ் நிறுவ னத்தின் மேலாண் இயக்குநர் சுனில் உதப்பா தெரிவித்தார்.

பெங்களூருவில் அந்த நிறுவனம் சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பாதுகாப்பான ஏடிஎம் இயந்திரத்தை அறி முகப்படுத்திய பின்னர், அவர் பேசியது:

வாடிக்கையாளர்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் அனைத்து வங்கி களும் அதிக எண்ணிக்கையில் ஏடிஎம் மையங்களைத் தொடங்கி வருகின்றன. ஆனால், எதிர்பாராதவிதமாக பெங்களூரு வில் அடிக்கடி ஏடிஎம் மையங்களில் உள்ள இயந்திரங்களை உடைத்து கொள்ளையடிக் கும் முயற்சிகள் அதிகரித்து வருகின்றன.

இதைத் தடுக்க எங்கள் நிறுவனம் சார்பில் 24 மணி நேரமும் பாதுகாப்பான, கொள்ளை யடிக்க முடியாத வகையில் நவீன தொழில்



நுட்பங்களுடன் பொருந்திய இயந்திரத்தை உருவாக்கியுள்ளோம் (படம்).

இதில் மனிதர்களின் நடவடிக்கைகளை வைத்தே ஒளி, ஒலி மூலம் குற்றங்களைத் தடுக்க முடியும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் அந்த நிறுவனத்தின் மூத்த செயல் அதிகாரி ஸ்ரீனிவாஸ் போப்பூரி உள் ளிட்டோர் கலந்து கொண்டனர்.